රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka.

දුරකතනය / தொலைபேசி: / Telephone: 011-2696211-13, 011-2166000
ෆැක්ස් / தொலைநகல்: / Fax: 011- 2695279
ඊ- මේල් / மின்னஞ்சல்: / E-mail: info@pubad.gov.lk
වෙබ් අඩවිය / இணைத்தளம்: / Web Site: www.pubad.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: MPA/PSD/SP PRO/2025-P1
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2025.01.09

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
ஆணைக்குழுச் செயலாளர்கள்
மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>இலங்கை திட்டமிடல் சேவை தரம் I உத்தியோகத்தர்களை விசேட தரத்திற்கு தரமுயர்த்துதல்</u>**

1670/32 ஆம் இலக்க 2010.09.10 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கான 2196/42 ஆம் இலக்க 2020.10.08 ஆம் திகதிய திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்க 2025.01.01 ஆம் திகதியில் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்திற்கு அனுமதிக்கப்பட்ட பதவி எண்ணிக்கையில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக, தகுதி பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

02. அதற்கிணங்க இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்தில் 2025.01.01 ஆம் திகதியில் நிலவும் பதினெட்டு (18) வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரி, தகைமை பெற்றுள்ள உத்தியோகத்தர்களில் சேவை மூப்புப் பட்டியலின் ஒழுங்குமுறைப்படி வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இரு மடங்கு உத்தியோகத்தர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கு இத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது.

03. விசேட தரத்திற்கு தரமுயர்வு பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்

I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பின்வரும் பாடங்களில் ஏதேனும் ஒரு பாடத்துக்குரிய பாடத்துறையில் முதுமானி பட்டமொன்றைப் பெற்றிருத்தல். இந்த முதுமானிப் பட்டத்தில் ஆகக் குறைந்தது ஒரு வருட ஆய்வுச் செயற்பாடுகள் உள்ளடங்குதல் வேண்டும்.

(அ) அபிவிருத்தி திட்டமிடல் / அபிவிருத்திக் கல்வி / கருத்திட்ட திட்டமிடல் / கருத்திட்ட முகாமைத்துவம்

(ஆ) பொருளாதாரம் / பொருளாதார அளவியல் / நிதிப் பொருளாதாரம் / அபிவிருத்திப் பொருளாதாரம்

(இ) வர்த்தகம் / நிதி முகாமைத்துவம்

(ஈ) சமூக விஞ்ஞானம் / சமூகப் பணி / சமூக அபிவிருத்தி /கல்வி / போஷனை / சுகாதாரம்

(உ) கணிதம் / புள்ளிவிபரங்கள் / புள்ளிவிபர ரீதியான தொழில்நுட்ப முறைமைகளும் புள்ளிவிபர ரீதியான ஆய்வும்

(ஊ) விவசாயம் / விலங்கு வளர்ப்பு / சூழலியல் / விவசாயப் பொருளாதாரம்

(எ) தகவல் தொழில்நுட்பம் / கணனி விஞ்ஞானம் / முகாமைத்துவ தகவல் முறைமைகள் (MIS)

(ஏ) புவியியல் / பிரதேச அபிவிருத்தி / நகர அபிவிருத்தி / நகர மற்றும் பிரதேச திட்டமிடல் / புவியியல் தகவல் தொகுதி / சனத்தொகையியல் / சனத்தொகைக் கல்வி

(ஐ) மனித வளங்களின் முகாமைத்துவம் / விற்பனை முகாமைத்துவம் / தொடர்பாடல்

(ஒ) பௌதிகத் திட்டமிடல் / போக்குவரத்து திட்டமிடல் / நகர மற்றும் கிராமிய திட்டமிடல் / கைத்தொழில் முகாமைத்துவம்

(ஓ) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் வேறொரு பாடத்துறை

II. தரமுயர்த்துவதற்கான தகைமைகள் பரீட்சிக்கும் திகதியில் சேவையின் முதலாம் தரத்தில் ஐந்து (05) வருடங்கள் செயலூக்கமானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும் முதலாம் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டதன் பின்னர் ஐந்து (05) சம்பள ஏற்றங்களை உழைத்திருத்தலும்.

III. தரமுயர்த்துவதற்கான தகைமைகளைப் பரீட்சீக்கும் திகதியில் சேவையில் பதினெட்டு (18) வருடங்களுக்கு குறையாத செயலூக்கமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

IV. தரமுயர்த்துவதற்கான தகைமைகளைப் பரீட்சிக்கும் தினத்திற்கு உடன் முந்திய ஐந்து (05) வருடங்களில் வருடாந்த செயலாற்றுகை திருப்திகரமானதாக அல்லது உயர் மட்டத்தில் காணப்படுதல்.

V. தரமுயர்த்துவதற்கான தகைமைகள் பரீட்சிக்கப்படும் திகதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இசைவான முறையில் ஒழுக்காற்றுத் தண்டனை எதனையும் பெற்றிராதிருத்தல்.

VI. மூன்றாம் வினைத்திறன் தடை தாண்டலை உரிய திகதியில் பூர்த்தி செய்திருத்தல்.

04. தரமுயர்த்தல் திட்டம்

4.1 சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு 2196/42 ஆம் இலக்கத்தையும் 2020.10.08 ஆம் திகதியையும் கொண்டதாகச் செய்யப்பட்ட 5 ஆவது பிரமாணக் குறிப்பு திருத்தத்திற்கு இணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் ஊடாக 2025.01.01 ஆம் திகதியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் இருமடங்குக்கு மேற்படாத எண்ணிக்கை விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி விசேட தரத்திற்கு நியமிப்பதற்கான சிபாரிசுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்படும்.

4.2 அதனடிப்படையில், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால், நேர்முகப் பரீட்சைச் சபையினால் சமர்ப்பிக்கப்படும் சிபாரிசுகளின் அடிப்படையில், தரம் I இலுள்ள உத்தியோகத்தர்களின் சேவை மூப்பின் தொடர் ஒழுங்கிற்கு ஏற்ப 2025.01.01 ஆம் திகதியில் விசேட தரத்தில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை உத்தியோகத்தர்கள் விசேட தரத்திற்கு தரமுயர்த்தப்படுவர்.

05. விசேட தரத்துக்கு தரமுயர்த்தப்படும் உத்தியோகத்தர்கள் விசேட தரத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்ட பின்னர் அந்நியமனம் பெற்ற திகதி முதல் 22 வேலை நாட்களுக்குள் புதிய பதவியில் கடமையைப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு அவ்வாறு கடமைக்கு 22 வேலை நாட்களுக்குள் அறிக்கை செய்யாத உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட விசேட தரத்தின் பதவி உயர்வு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் ஏற்பாடுகளின் படி ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

06. 2025.01.01 ஆம் திகதியில் நிலவும் வெற்றிடங்களுக்கு தரமுயர்த்தப்படுவதனால் அத்திகதியில் முனைப்பான சேவையில் இருந்த தகைமை பெறும் உத்தியோகத்தர்கள் தங்களால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணங்களின் பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஊடாக எனக்கு 2025.01.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்ப வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத்திற்காகவும் பொறுப்பேற்கப்பட மாட்டாது என்பதுடன் குறைபாடுகள் உள்ள மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

07. 2025.01.01 ஆம் திகதிக்கு மேற்படி அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி குறித்த உத்தியோகத்தர்களை அறிவுறுத்துமாறு தெரிவிப்பதோடு மேலே பந்தி 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, முந்தைய பதவி உயர்வுச்

சந்தர்ப்பத்தில் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றிய போதிலும் பதவி உயர்வு கிடைக்காத அல்லது விண்ணப்பிக்க முடியாது போன உத்தியோகத்தர்களும் இந்தப் பதவி உயர்வுக்காக விண்ணப்பிக்கலாம்.

08. மேலும் 2024.07.01 ஆம் திகதியில் இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தரத்துக்கு பதவி உயர்த்துவதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள உத்தியோகத்தர்களால் இந்த அறிவித்தலின்படி விண்ணப்பங்களை சமர்ப்பிக்கப்படும்போது விண்ணப்பத்துடன் 2024 ஆம் ஆண்டுக்குரிய செயலாற்றுகை அறிக்கை மற்றும் சம்பள ஏற்றப்பத்திரத்தினை மாத்திரம் கோப்பில் இணைத்து சமர்ப்பிப்பது போதுமானது.

09. இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டுவது சிறந்தது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஒப்பம்./ எஸ்.ஆலோக்கபண்டார

செயலாளர்

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு


தொலைபேசி : 0112 688124

தொலைநகல் : 0112 691690

மின்னஞ்சல் முகவரி : d.psd.pubad@gmail.com